REGD. No. M. 6311 'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 178

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஒன்று ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஒன்று ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 23உ. வியாழன் (7—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 24உ. வெள்ளி (8—1—54)

"கலப்பு மணம் கண்டோருக்கு வரவேற்பு தருக!"

—:x:—

"ஜாதிக் கொடுமையைச் சாடுவீர்"

—(:)—

"மாற்றுக் கட்சிகள்—மக்கள் நன்மைக்கு இருக்கட்டும்—மாச்சரியத்தை வளர்க்க வேண்டாம்"

'உங்கள் வாழ்த்து எனக்கல்ல—என் கொள்கைக்கு"

வேலூர் நகர சபை வரவேற்பில் அண்ணாதுரை

வேலூர், ஜன. 7

"ஜாதிக் கொடுமையால், நாடு படும் அல்லல் கொஞ்சநஞ்சமல்ல; இந்தப் பொது வியாதியை ஒழித்துக் கட்டுவதில், எங்களோடு ஒத்துழைக்கும்படி, நகராட்சி மன்றங்களை நான் கேட்டுக் கொள்வேன். அவர்கள், மக்களுடன் நெருங்கிய தொடர்பு பெறும் நிலையிலிருப்பவர்கள்—அன்றாடம் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள்—நீங்கள், இதையும், உங்கள் கடமையாகக்கொள்ள வேண்டும்,"

என்று, வேலூர் நகராட்சி மன்றம் வழங்கிய வரவேற்புக்குப் பதிலளித்த தி. மு. கழகப் போதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் வலியுறுத்தினார்.

அலங்காரப் பந்தலில் பொதுச் செயலாளருக்கு, நகராட்சி மன்றத் தலைவர் தோழர் சீதாபதி பி. ஏ. பி. எல்., வரவேற்பிதழை வாசித்தளித்து, மாலை சூட்டினார். விழா துவங்கியதும் நகர சபைத் துணைத் தலைவர் தோழர் சீராமுலு, நகர சபை உறுப்பினர்களை, பொதுச் செயலாளருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

வரவேற்பைப் பெற்றுக் கொண்டு பொதுச் செயலாளர் கூறியதாவது:

"இதுபோன்ற வரவேற்புகளை வாங்கிப் பழக்கப்பட்டவனல்ல நான். ஏனெனில், நகராட்சி மன்றங்கள், சாதாரணமாகப் பொதுப் பணியிலீடுபட்டோருக்கு; வரவேற்புகள் வழங்குவதில்லை. அதற்குப் பதில்; கூறும் அமைச்சர்களுக்கே, வரவேற்புகள் வழங்கி—தம்முடைய குறைகளைத் தெரிவிக்கும்.

"அந்த வரவேற்பைப் பெறும் அமைச்சரும், 'ஆகட்டும், கவனிக்கிறேன்!', என்று சொல்லிச் செல்வார். ஆனால், எனக்களிக்கப்பட்ட இந்த வரவேற்பிலே, நகர மன்றத்தினர், தம்முடைய குறைகளைக் கூறவில்லை; அதற்குப் பதில், வேலூர் நகர சபையின் சிறப்பையும், அது ஆற்றிவரும் பணியினையும் குறிப்பிட்டிருப்பதோடு, பொது வாழ்க்கையில் நான் ஆற்றிவரும் சிலபல பணிகளின் சிறப்பையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"அவ்விதம் அவர்கள் குறிப்

(4-ம் பக்கம் பார்க்க)

கபார்கான் விடுதலையானார்!

கராச்சி, ஜன. 6—

எல்லைகாந்தி கான் அப்துல் கபார்கான், ராவல்பிண்டி சிறையிலிருந்து இன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்.

சிறிது நேரம் அமைச்சரவை கூடியிருப்பதை உத்தேசித்து, கபார்கான், தமது விருப்பப்படி இன்றிரவையும் சிறையிலேயே கழித்தார்.

பாகிஸ்தான் சர்க்காரின் நேற்றைய அறிவிப்பிற்கிணங்க கபார்கான் சிறையிலிருந்து சுதந்திரம் பஞ்சாபிலேயே தங்கியிருப்பார்.

கபார்கான் விடுதலைச் செய்தியை இன்றிரவு பாகிஸ்தான் அறிவித்தது.

• • •

கராச்சி ஜன. 7—

கபார்கான் விடுதலைச் செய்தியைக் கராச்சிப் பத்திரிகைகள் முழுப் பக்கத்தில் தலைப்பிட்டு நேற்று பிரசுரித்தன. அவரது படங்களும் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டன.

செந்தேள் கொட்டிய நிலை

—(:)—

'சேதி இல்லை' என்கிறார் ஆச்சாரியார்

சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கல்வித் திட்டம் பற்றி காரசார விவாதம்

சென்னை, ஜன. 7—

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி நேற்று மாலை ராஜாஜி மண்டபத்தில் கூடி, புதிய கல்வித் திட்டம் பற்றிய பாருலேக்கர் அறிக்கையைப் பரிசீலனை செய்தது.

கூட்டம் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 3 மணி நேரம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆச்சாரியார் தலைமை வகித்தார்.

கல்வி மந்திரி சி. சுப்ரமணியம் விவாதத்தைத் துவக்கி வைத்தார். உறுப்பினர்கள் பலர் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

ஆர். வி. சாமிநாதன் போன்ற மெம்பர்கள் காரசாரமாக எதிர்த்துப் பேசினர்.

பெரும்பாலான மெம்பர்கள் கல்வித் திட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

ஆச்சாரியார், தன்னை மந்திரி பதவியிலிருந்து அகற்றும் முயற்சியை எதிர்த்துக் கூறி அனுதாபம் பெற முயன்றார்.

காமராசர், கல்வித் திட்டத்தையும், மற்ற பிரச்சினைகளையும் ஒன்றோடொன்று குழப்பக் கூடாது என்று குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

மூன்று மணி நேர விவாதத்திற்குப் பிறகு கூட்டம் கலைந்தது, வெளியே வந்த ஆச்சாரியாரை, பத்திரிகை நிருபர்கள் சந்தித்துக் கேட்டபோது, 'பத்திரிகைக்குக் கூற செய்தி ஒன்றும் இல்லை,' என்று கூறினார்.

விபரமறிந்த வட்டாரம், 'செந்தேள் கொட்டிய நிலை அவருக்கு; செய்தி இல்லை என்று சொல்லாது, வேறு என்ன சொல்ல முடியும்?' என்று கூறுகிறது.

தூத்துக்குடி தோழர்கள் ஜாமீன் மனு

செஷன்ஸ் நீதிபதி நிராகரித்தார்

திருநெல்வேலி, ஜன. 4—

தூத்துக்குடி சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலிருக்கும் தோழர் பிச்சுமணி முதலிய 26 தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் தங்கசாமி அவர்கள், திருநெல்வேலி செஷன்ஸ் நீதிபதி கொரகப்பா முன்னிலையில், அவர்களை ஜாமீனில் விடுதலை செய்யுமாறு மனு தாக்கல் செய்தார்.

ஐந்து மாதங்களுக்கு மேல் அவர்கள், சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்றும், அவர்களை விடுதலை செய்யவேண்டுவது அவசியம் என்றும் வழக்கறிஞர் தங்கசாமி வாதித்தார்.

சர்க்கார் வக்கீல், "இன்னும் சில முக்கிய சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியிருப்பதால், அது முடிவதற்கு முன், ஜாமீனில்விடுவது உசிதமல்ல" என ஆட்சேபித்தார்.

'இந்தக் கட்டத்தில் எதிரிகளை ஜாமீனில் விடுவதற்கில்லை' என்று கூறி, ஜாமீன் மனுவை செஷன்ஸ் நீதிபதி நிராகரித்தார்.

ஆச்சாரியார் துப்பாக்கித் துரைத்தனம்

— (:) —

'அகிம்சா' ஆட்சியில் 8 இடங்களில் 54 ரவுண்டுகள் சுடப்பட்டன

—[o]—

15 மாதங்களில் 11 தடியடிப்பிரயோகம்

உழைப்பாளர் கட்சி உறுப்பினர் கேள்விகளுக்கு சட்டசபையில் பதில்

சென்னை, ஜன. 7 —

அகிம்சாமூர்த்தி காந்தியாரின் சீடர் ஆச்சாரியார் பதவிக்கு வந்த 15 மாதங்களில் 8 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அவைகளில், 54 ரவுண்டுகள் போலீசார் சுட்டனர்; 11 தடவைகள் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இந்தத் தகவலை. உழைப்பாளர் கட்சி உறுப்பினர் தோழர் அரங்கநாதன் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு எழுத்து மூலம் முதன் மந்திரி ஆச்சாரியார் நேற்று சட்டசபையில் அறிவித்தார்.

[ஜூலை 15-ம் நாள் நடைபெற்ற தூத்துக்குடி, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகங்களில், தூத்துக்குடியில் 8 ரவுண்டுகளும், கல்லக்குடியில் 16 ரவுண்டுகளும் சுடப்பட்டன. இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களில் தூத்துக்குடியில் 4 பேர்களும், கல்லக்குடியில் 2 பேர்களும் கொல்லப்பட்டனர்; பலர், துப்பாக்கிக் குண்டுகளால் படுகாயமடைந்தனர்.]

சென்னை சட்டசபையில் தோழர் அரங்கநாதன் கேட்ட கேள்விகளும் அதற்கு ஆச்சாரியார் அளித்த பதில்களும் பின்வருமாறு:

அரங்கநாதன்:—சென்னை மாகாணம் முழுவதிலும், 1952ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிலிருந்து 1953 ஆகஸ்டு 1-ந்தேதி வரை எத்தனை இடங்களில் பொதுக்கூட்டங்கள்மீதும், ஆர்ப்பாட்டக்காரர்கள்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது?

ஆச்சாரியார்:—8 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அரங்கநாதன்:—எவ்வளவு தடவைகள் (ரவுண்டுகள்) சுடப்பட்டன?

ஆச்சாரியார்:—மொத்தம் 54 தடவைகள் சுடப்பட்டன.

அரங்கநாதன்:—எவ்வளவு தடவை தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது?

ஆச்சாரியார்:—11 தடவைகள் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

ஆந்திரா பிரிந்த பிறகு மீதமுள்ள சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில்தான் பட்டியலிடப்பட்டிருப்பதாக முதல் மந்திரி அறிவித்தார்.

நம் நாடு

சென்னை 7—1—1954 வியாழன்

பாட்சா கான்

தங்களுடைய 'அரசரா'க, எல்லைப்புற பட்டாணிய மக்களால் மதிக்கப்பட்டு வரும் 'பாட்சா கான்' என்ற அப்துல் கபார் கான், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, சுதந்திர புருஷராக பாகிஸ்தானில் இன்னும் சில நாட்களில் உலவப் போகிறார். இத்துறையில் நல்லறிவு ஏற்பட, பாகிஸ்தானுக்கு, ஆறு ஆண்டுகள் பிடித்தன.

இற்றைக்குச் சரியாக ஆறு ஆண்டுகளுக்குமுன், கபார் கான், நாட்டில் விருப்பம்போல் நடமாடுவதும், அரசியல் வாழ்வில் ஈடுபடுவதும் பாகிஸ்தான் சர்க்காருக்கு ஆபத்து என்று, அந்த சர்க்கார் அச்சங் கொண்டது. உடனே, எல்லைப்புறத் தலைவரை விசாரணையின்றியே சிறையில் தள்ளி மூடி, அவர் சுதந்திரத்தைப் பறித்தது.

கபார்கானுக்கு சிறையில் வேண்டிய எல்லா வசதிகளையும், பாகிஸ்தான் சர்க்கார் செய்து கொடுத்திருக்கும் என்பதில் ஆட்சேபணை இல்லை. சுதந்திரமாகப் பார்த்து, தோழமையோடு தம் கூட்டத்திடையே பழகி, கொஞ்சிக் குலாவி களிப்பெய்தும் பஞ்சவர்ணக் கிளியை, சிறகுகளை ஒட்டக் கத்தரித்து, பொன் கூண்டில் இட்டு, இனிய கனிகளை வேண்டி வேண்டிக் கொடுத்து, உள்ளம் நிறைந்த அன்போடு உபசரித்தாலும் கிளிக்கு மகிழ்ச்சியா பிறக்கும்? பட்டினியாகக் கிடந்து இஷ்டம்போல் ஊர் சுற்றி, இரை தேடுவதில் ஒரு கிளி பெறும் இன்பம், கனிக் குவியல்களிடையே கூண்டில் கிடக்கும் கிளிக்கு ஒருக்காலும் இருக்கவே முடியாது. இந்தக் கிளி போலத்தான், பாகிஸ்தான் சிறையில் கபார் கானும் காலங் கழித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

கபார் கான், சர்க்காரைக் கவிழ்க்க ஏதாவது ஒரு வகையில் முயற்சித்தார் என்று கூறுவதற்கு, போதிய சாட்சியங்கள் இருந்திருக்குமானால், அவரைக் குற்றக் கூண்டில் ஏற்றி, வெளிப்படையாக விசாரணை நடத்தி, மன்றத்தின் தீர்ப்பைப் பெற்று அவரைத் தண்டிக்கும் நியாயமான முறையை, பாகிஸ்தான் சர்க்கார் அப்பொழுதே மேற்கொண்டு இருக்க வேண்டும். ஆனால், பாகிஸ்தான் சர்க்கார் அந்த நியாயமான, நாகரீக விசாரணை முறையைக் கைக்கொள்ளவில்லை. தம்முடைய சட்டப் புத்தகத்தில் உள்ள தனிப் பாதுகாவல் சட்டத்தின் கீழ், கபார் கானை விசாரணை செய்யாமலே இதுவரையில் சிறையில் தள்ளி வைத்திருந்தது. இது, எதைக் காட்டுகிறது?

சர்க்காரைக் கவிழ்க்க கபார்கான் எந்த விதச் சதிச் செயலிலும் ஈடுபடவில்லை என்ற உண்மையையே இது வலியுறுத்துகிறது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல எல்லா சந்தேகங்களையும் பிடித்துக் கொண்டு இருப்பது போலவே பாகிஸ்தான் சர்க்காரையும் பற்றிக்கொண்டிருக்கிற 'எதிர்ப்பு அச்சம்'தான், கபார்கான் சிறையில் தள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் என்பது விளக்கமாகிறது, நிற்க,

எல்லைப்புற காந்தி, காங்கிரஸ் முன்னணித் தலைவர்களின் வரிசையில் வைத்து, அன்று எண்ணப்பட்டவர். அவர், அந்தக் காலத்தில் பாகிஸ்தான் கோரிக்கையைப் பலங்கொண்ட மட்டும் முழு மூச்சாக எதிர்த்தவர். எல்லைப்புறப் பட்டாணியரிடம் செல்வாக்கு மிக்கப் பெற்றுள்ளவர். எனவே, அவரால் எதிர்க்கப்பட்ட பாகிஸ்தான் உருவெடுப்பதை அவர் விரும்ப மாட்டார். அதைக் கவிழ்க்கவே எப்படியும் அவர் சதியிலீடுபடுவார், என்று பாகிஸ்தான் சர்க்கார், கபார்கான் விஷயத்தில் முடிவிற்கு வந்திருக்கக்கூடும். அந்த முடிவு நன்கு ஆராயாமல் எடுத்த அவசர முடிவேயாகும்.

அவர்மீது பாகிஸ்தான் கொண்ட சந்தேகம் எவ்வளவு அபத்தமானது என்பதை அவர் பேச்சிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்:

"பாகிஸ்தான் உருவாகி விட்டது. அதற்குச் சேவை செய்ய வேண்டியது நமது கடமை. எனவே, பாகிஸ்தான் மக்கள் ஒன்றுபட்டு, ஏழை மக்களுக்கு ஊழியம் செய்யத் தங்கள் உயிரையும் பணயம் வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். உண்மையான மக்களாட்சி அரசை நிறுவவும், குடிமக்கள் அனைவருக்கும் சமத்துவத்தைப் பெற்றுத் தரவும், நான், எனது முழு ஆற்றலையும் பயன்படுத்துவேன்."

இவ்வாறு, பாகிஸ்தான் பாராளுமன்ற முதற் கூட்டத்தில், தமது உள்ளத்தைத் திறந்து பேசியிருக்கிறார், எல்லைப்புற காந்தி!

பொறுப்பு வாய்ந்த அவருடைய வாயுரையை, அப்படியே ஒப்புக்கொண்டு, நாட்டிற்கு ஊழியம் புரிய, அவருக்கும் ஒரு நல்வாய்ப்பைத் தேடிக் கொடுத்திருக்க வேண்டும், பாகிஸ்தான் சர்க்கார்! ஆனால், சர்க்கார் என்ற சொல்லுக்குப் பாத்திரமாக இருக்கிற, எல்லா சர்க்கார் அமைப்புகளும், தம் தம் எதிர்க் கட்சியினரின் வாய்மையில் அவநம்பிக்கைக் கொண்டு நடந்து கொள்வதுபோலவே, அவர் சொல்லிலும் பாகிஸ்தான் சர்க்கார் அவநம்பிக்கைக் கொண்டு விட்டது. எனவே, மற்ற சர்க்காரைப் போலவே, பாகிஸ்தான் சர்க்காரும் அவரை சிறையில் தள்ளி, தமது ஆட்சிக்கு ஒரு குறையாத வழியைத் தேடிக் கொண்டது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகாவது எல்லைப்புற காந்தி மீது பாகிஸ்தானுக்கு நம்பிக்கை ஏற்பட்டதே, அதுவே பாராட்டத்தக்கதுதான். பாராட்டுதலுக்கு உரியதானாலும், அவரைப் பற்றிய சந்தேகத்தில் இன்னமும் பாகிஸ்தானுக்கு முழுத் தெளிவு ஏற்பட்டதாகக் காணோம். முழுத் தெளிவு ஏற்பட்டிருந்தால், அவருடைய நடமாட்டத்தைப் பாஞ்சாலத்திற்குள்ளாகவே கட்டிப்போட்டு வைக்க பாகிஸ்தானுக்கு எண்ணமே ஏற்பட்டிருக்கக் கூடாது.

எனவே, அவருடைய விடுதலை வாழ்விற்கு விதித்துள்ள இந்தத் தடையையும் உடனடியாக பாகிஸ்தான் சர்க்கார் ரத்து செய்ய முன்வர வேண்டும்.

இதையே முன் மாதிரியாகக் கொண்டு, இந்திய சர்க்காரும், விசாரணையில்லாமல் காவலில் போட்டிருக்கும் அரசியல் கைதிகளை, ஒன்று விடுவிக்க முன்வர வேண்டும் அல்லது நீதிமுன் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் ஆட்சி மொழி

கோரிக்கையினருக்கு செந்தேன்

— (:) —

மற்ற திராவிட இனமொழிக்கும் ஆக்கம் தேடுவது அவர்கள் கடமை

"சுவிட்சர்லாந்தில், சிறுபான்மையான ஒரு வகுப்பினருடைய மொழியாகிய "ரோமான்சு" நான்கு ஆட்சி மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படுவதன் தன்மையைச் சற்று உற்று நோக்கவேண்டும்."

"சுவிட்சர்லாந்தினுடைய மக்கள் தொகையின் மொத்த எண்ணிக்கை 42,66,000 இதில் இலத்தீன் மொழியிலிருந்து சிதைந்த 'ரோமான்சு' மொழி, ஒரு குறிப்பிட்ட சிறு நிலப் பரப்பில்தான் பேசப்படுகிறது."

"பேசும் வகுப்பினருடைய எண்ணிக்கை 46,000தான். மொத்த மக்கள் எண்ணிக்கையில் 100-க்கு ஒன்று என்று கணக்கிடக் கூடிய நிலைமையில்தான் உள்ள சிறு வகுப்பினருடைய மொழியும் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்."

"நம்முடைய நாட்டில், மலையாள மொழியைப் பேசும் மக்கள் ஏறக்குறைய 31 லட்சம் இருக்கிறார்கள். கன்னட மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை 10 இலட்சத்துக்கு மேற்பட்டது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது."

"பாகிஸ்தானும் மக்களாட்சி கொள்கையை ஒப்புக்கொண்டு வங்காளத்தை ஆட்சி மொழியாகச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது."

"நம்முடைய நாட்டிலும், மக்களாட்சிக் கொள்கையின்படி, தமிழ் ஆட்சியாவதோடு கூட, சிறுபான்மை மக்களின் மொழியாகிய மலையாளமும், கன்னடமும் கூட அரசாங்க நிர்வாக மொழிகளாக ஒப்புக் கொள்ளவேண்டும்."

—(த. நா)

இந்தியாவின் துணித் தொழிலுக்கு புது ஆபத்து

டோக்கியோ, ஜன. 7—

இந்தியாவின் துணி ஏற்றுமதிக்கு ஜப்பானின் போட்டி காரணமாகப் புது ஆபத்து ஏற்படலாம் என்று தெரிகிறது. இதன் காரணமாக, எகிப்து மார்க்கெட்டுகளை இந்தியா இழக்க நேரிடலாம்.

ஜப்பான், தன் பொருள்களுக்கு இந்தியாவின் விலையைக் காட்டிலும் குறைத்துத் தருகிறது; இதன் காரணமாக, ஜப்பான் துணிகள், எகிப்தில் அதிகமாக இறக்குமதியாவது சாத்தியம்.

கண் பார்வையை இழந்தவர்கள்

இந்தியாவில் 20 லட்சம் பேர் உள்ளனர்

சென்னை, ஜன 7—

"இந்தியாவில், இப்போது பார்வையை இழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 20 லட்சம்; தென்னிந்தியாவில் மட்டும் 5 லட்சம் பேர் உள்ளனர்; இவர்களுக்கு வேலை தருவதற்கு 10 ஸ்தாபனங்களே தான் உள்ளன; பயிற்சி பெற்ற பார்வை இழந்தவர்களுக்கு வேலை தேடித் தருவது இந்திய சர்க்காருக்குப் பெரும் பிரச்னையாக உள்ளது."

—இவ்வாறு, ஐ. நா. ஸ்பெஷலிஸ்ட் ஆர். பி. ஜோசப் தெரிவித்தார்.

• • •

கண் இழந்தவர்கள் மூவருக்கு வேலை

ஆர். பி. ஜோசப்பின் முயற்சி காரணமாக, சென்னை பக்கிங்காம் — கர்னாடிக் மில்களில், கண் இழந்த மூவருக்கு வேலை கிடைத்துள்ளது. கண் பார்வை இழந்தவர்களுக்கு, மில்லில் வேலை கிடைத்துள்ளது, இந்தியாவின் சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவையாகும்.

இவர்கள் டோராடூன், கண் இழந்தவர்களுக்கான கைத்தொழில் பயிற்சி ஸ்தாபனத்தில் பயின்றவர்கள்.

இந்தியா — பாகிஸ்தான் உணவு உற்பத்தி

காமன்வெல்த் நிதிமந்திரிகள் மாநாட்டில் வற்புறுத்தல்

சிட்னி, ஜன. 7—

இந்தியா - பாகிஸ்தான் நாடுகள், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று சிட்னியில் நடைபெறும் காமன்வெல்த் நிதி மந்திரிகள் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள நிபுணர்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகள், தங்கள் நாட்டில் மூலதனம் அதிகமாகப் போடப்பட்டால்தான். இது சாத்தியமாகும் என்று கூறியதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானில் செயற்கை மழை முயற்சி

குவெட்டா, ஜன. 6—

பாகிஸ்தானில் செயற்கை மழை பெய்விக்க செய்யப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற்றுவருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. 'யுனெஸ்கோ' நிபுணர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் இந்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தெரிந்து கொள்ளுங்கள்!

புது டில்லி, ஜன. 5—

1. 1953-ம் ஆண்டில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியங்களின் மொத்த அளவு 20,17,850 டன்னாகும். 1952-ல், மொத்தம் 38.5 லட்சம் டன் உணவுத் தானியங்களும், 1951-ல், 47.2 லட்சம் டன் உணவுத் தானியங்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாயின.
2. 1952—53-ல், உள்நாட்டில் உபயோகிக்கப்பட்ட சர்க்கரையின் மொத்த அளவு 16.56 லட்சம் டன்னாகும்; 1951—52-ல், மொத்தம் 11.63 லட்சம் டன் சர்க்கரையும், 1950—51-ல், 10.79 லட்சம் டன் சர்க்கரையும் உபயோகிக்கப்பட்டது.
3. ஆறு பிராந்திய ரயில்வேக்களும், சித்தரஞ்சன் என்ஜின் உற்பத்திசாலையும், நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு ரயில்வே பயிற்சி நிலையங்களில், 6,100 பேருக்கு இப்பொழுது பயிற்சியளித்து வருகின்றன. பயிற்சியாளரில் ஒருவர் நேப்பாளத்தைச் சேர்ந்தவர்.
4. மத்தியத் தொழிலாளர் மந்திரி காரியாலயம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் 59 முகியோர் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது; அந்நிலையங்களில் நுட்பத் துறைப் பயிற்சியும், தொழில் துறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன; 1953 செப்டம்பர் மாதத்தில், இந்த நிலையங்களில் மொத்தம் 7,717 பேர் பயிற்சி பெற்று வந்தனர்.
5. இந்தியாவில், 15 'டிரைடாக்குகள்' (தண்ணீரை வடிய வைத்துச் செப்பனிடும் துறைகள்) உள்ளன; இவைகளில் கல்கத்தாவில் இரண்டும், பம்பாயில் இரண்டுமாக உள்ளன. பெரிய துறைகளில் ஆழ்கடலில் செல்லும் கப்பல்களும் நிற்கலாம்.
6. 1952—53-ல் தபால் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கிக் கணக்குகளில் இருந்த மொத்த சேமிப்புத் தொகைகள் 120.54 கோடி ரூபாயாகும்.
7. 1951—52-ல், மொத்த சேமிப்புத் தொகை 117.76 கோடி ரூபாய்.

பெண் கல்வி வளர வேண்டும்

நேருவின் வற்புறுத்தல்

ஐதராபாத், ஜன. 6—

"இந்நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால், பெண்களுக்குக் கல்வி அவசியம். மக்கட் தொகையில் பாதிக்கு மேல் உள்ள பெண்களுக்குக் கல்வி கற்பிக்காவிட்டால் நாம் முன்னேற்றத்தைப் பற்றி எண்ணவே முடியாது; பின் நிலையில் தங்கிவிட நேரிடும்; குழந்தைகளிடம் அதிகக் கவனம் செலுத்தி செல்வாக்கும் பெறுவதினால், பெண்களுக்கு, ஆண்களைவிட கல்வி வசதி அதிகம் வேண்டும்."

என்று, ராஜ்பகதூர் வெங்கட்ராமரெட்டி பெண்கள் கல்லூரி அடித்தளக் கல்நாட்டு விழாவில் பண்டித நேரு பேசினார்.

மலையாளிகள் மாநாடு

சென்னை, ஜன. 6—

சென்னையில் மலையாளிகள் மாநாடு ஜனவரி 9, 10-ந் தேதிகளில் செயின்ட் மேரீஸ் ஹாலில் நடைபெறும். எஸ். கே. பட்டேல் இம்மாநாட்டை ஆரம்பித்து வைப்பார். தோழர் கேளப்பன் தலைமை வகிப்பார்.

'ஐக்கிய கேரளம் இப்போது அவசியமா' என்பது குறித்து இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

நல்லக்குடி அறப்போர் வழக்கு

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. சாட்சியம்

திருச்சி, ஜன. 2—

1—1—54-ல், மீண்டும் டால்மியாபுரம் கலவர வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லா எதிரிகளும் இன்று நீதி மன்றத்திற்கு வந்திருந்தனர்.

எதிர்தரப்பில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது :—

"நான் லால்குடியில் நடந்த திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாட்டிற்குச்சென்றிருந்தேன்; வடநாட்டாரின் பெயரான 'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி' என்று மாற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது; டால்மியாபுரம் என்ற பெயர் தமிழர்களுக்கு அவமானச் சின்னமாகவுள்ளது என்று கூறப்பட்டது; பெயர் மாற்றப் போராட்டத் தலைவராகத் தோழர் மு. கருணாநிதி நியமிக்கப்பட்டார்; நான் தீர்மானத்தை ஆதரித்துப்பேசினேன்; மாநாட்டிற்குப் பத்தாயிரக் கணக்கான மக்கள் வந்திருந்தனர்; தீர்மானம் மாநாட்டில் ஒருமனதாக நிறைவேறியது."

சாட்சியை அரசாங்க வழக்கறிஞர் திரு. மகாதேவ சாஸ்திரி குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது :—

"நான் சட்டசபைக்கு உழைப்பாளிகள் கட்சியின் சார்பில் தேர்தலில் நின்றேன்; என்னை ஆதரித்து தி. மு. கழகம், பொதுவுடைமைக் கட்சியினர் தனித் தனியே வேலைசெய்தனர்; நான் தி. மு. கழக உறுப்பினர் அல்ல; நான் தி. மு கழகத்திற்கு ஆதரவு காட்டியுள்ளேன்; தி. மு கழக மத்திய செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., சிறையிலிருந்த சமயம், நான் தி. மு. கழகத்தின் பொறுப்பாளராக இருந்தேன்."

"அகிம்சா முறைப்படி போராட்டம் என்றால், 'கல்லக்குடி' என்ற பெயர்த் தாளை 'டால்மியாபுரம்' என்ற பெயர்ப் பலகையில் அமைதியாக ஒட்ட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ரயிலை நிறுத்தும் போராட்டம் தனிப் போராட்டம்; ரயிலை நிறுத்தும் கிளர்ச்சி தமிழ்நாடு முழுதும் நடைபெற்றது; ரயிலிலிருக்கும் சங்கிலியைப் பிடித்து இழுத்து, ரயிலை நிறுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது; நான் சென்னை அசெம்பிளியிலிருக்கும் போது, டால்மியாபுரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று தந்தி மூலம் அறிந்தேன்; தோழர் மு. கருணாநிதி, ரயில் முன் படுத்ததைக் குறித்து நான் கண்டிக்கவில்லை; அது கட்சி தலைவர்கள் செய்யவேண்டியது"

பிறகு அரியலூர்த் தொகுதி எம். எல். ஏ., தோழர் எம். பழனியாண்டி சாட்சியமளித்தார்; அவர் கூறியதாவது :—

"நான் அரியலூர் தொகுதி எம். எல். ஏ., டால்மியாபுரம் தொழிலாளர்கள் சங்கத் தலைவராக இருக்கிறேன்; ஏப்ரல் மாதம் நடந்த லால்குடி மாநாட்டில் பங்கு எடுத்துக் கொண்டேன்; 'டால்மியாபுரம்' என்ற பெயரை, 'கல்லக்குடி' என்று மாற்றவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசினேன்; போராட்டம் அமைதியாக நடத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது; 14—7—53-ந் தேதி லால்குடியில் நடந்த தி. மு. கழகப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தேன்; அக்கூட்டத்தில், போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியவர் முன்கூட்டியே தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்றும், அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் கலந்துகொள்ள வேண்டுமென்றும் தோழர் மு. கருணாநிதி பேசினார். எதிரிகள், அதாவது தி. மு. கழகத்தினர், தேர்தலில் எனக்கு விரோதமாக வேலை செய்தார்கள்; தி. மு. கழகத்தின் கொள்கை—தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழி பேசும் மக்கள் வாழும் நாட்டை 'திராவிட நாடு' என்றும், திராவிடநாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள்; இவைகளை, அவர்களின் இலக்கியங்கள் மூலம் அறிந்திருக்கிறேன்; நான் தி. மு. கழகத்தின் அனுதாபி அல்ல; தி. மு கழகத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை; நான் அரியலூர் தொகுதி எம். எல். ஏ., ஆகையால், லால்குடி தி. மு. கழக மாநாட்டில் கலந்து கொண்டேன்; 1, 23, 24, 6, 8-வது எதிரிகளை எனக்குத் தெரியும். மற்றவர்களைத் தெரியாது: நான் லால்குடி மாநாட்டிற்கு முன் தி. மு. கழகக் கூட்டங்களில் பங்கு கொண்டதில்லை; அமைதியாக என்றால், டால்மியாபுரம்பெயர்ப் பலகையில் கல்லக்குடி என்ற பெயர்த்தாளை ஒட்டவேண்டும்; தடுத்துப் போலீசார் கைதுசெய்தால் தடை செய்யாமல் கைதியாகவேண்டும் என்பது தான் விளக்கம்"

பின்னர், தோழர் ஈ. வி கே சம்பத்தை எதிரிகளின் சாட்சி பட்டியலிலிருந்து எதிர் தரப்பு வழக்கறிஞர் நீக்கிவிட்டார்.

தோழர் தங்கவேலு அடுத்தபடி சாட்சியம் கூறியதாவது :—

"நான் அரியலூரில் சைக்கிள் கடை வைத்திருக்கிறேன்; தோழர் கண்ணதாசன் தலைமையில் சென்ற கூட்டத்தைப் போலீசார் தடியால் அடித்தபோது, குற்றம் சாட்டப்பட்டுள்ள வடிவேலு என்னுடன் நின்றுகொண்டிருந்தார்; நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்; வடிவேலுவுக்கு அடிபட்டதா என்று எனக்குத் தெரியாது"

குறுக்கு விசாரணையில், சாட்சி பதிலளித்ததாவது :—

"வடிவேலுவை, எனக்கு 10 வருடங்களாகத் தெரியும்; சைக்கிள், வாடகைக்கு எடுக்க அடிக்கடி வருவார். நான் தி மு கழக மெம்பர்தான்."

அடுத்த சாட்சி தோழர் பட்லம் கூறியதாவது :—

"நான், வாளாடியில் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருக்கிறேன்; சரக்கு வாங்க டால்மியாபுரம் சென்றேன்; 1–50 மணிக்கு டால்மியாபுரம் ஸ்டேஷனில் ஏகக் குழப்பமாக இருந்தது; அதனால் ஸ்டேஷன் வெளியிலேயே இருந்தேன்; ஜனங்கள் ஓடிவருவதைக் கண்டேன்; அப்போது முனுசாமி என்பவர் குண்டடிபட்டு, மயக்கமடைந்து கீழே விழுந்தார்; அவர் யார் என்று தெரியவில்லை."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"பீடி கம்பெனியில் பீடி வாங்கவே டால்மியாபுரம் சென்றேன்; நான் வாங்க வந்த பீடி திருச்சியில் கிடையாது."

அந்தப்புர அழகியைக் காதலித்த காவலாளி

சவுக்கால் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டானும்!

பாரீஸ், ஜன. 5—

அந்தப்புரத்தில் வைத்திருந்த அழகியைக் காதலித்ததற்காக ஒரு அரண்மனைக் காவலாளியை சவுக்கால் அடித்தே கொல்ல உத்தரவிட்ட குற்றச்சாட்டு, முன்னர் மொராக்கோ சுல்தான் மீது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நான்கு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அந்தக் காவலாளியின் சவத்தை மீண்டும் தோண்டியெடுத்து போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்

தன் உயிர் போய்விடும் என்பதை நன்கு தெரிந்திருந்தும், அவன் அந்த அழகியைக் காதலித்து, அதன் பலனாக ஒரு குழந்தையும் பிறந்துவிட்டது. விஷயம் தெரிந்த சுல்தான் தினத்திற்கு 100 சவுக்கடி வீதம், 10 தினங்கள் சவுக்கடி கொடுக்கும்படி உத்தரவிட்டார் மூன்று நாட்கள் பெற்ற சவுக்கடியிலேயே அக்காவலாளியின் உயிர் போய்விட்டது. —ரேபன்

"எண்ணிக்கையிலும் கூடியுள்ளோம்! அறநெறி வழுவா உள்ளமும் கொண்டுள்ளோம்!!"

—:X:—

'பம்பாயில்உள்ளமராட்டியர்ஏழையர்தான்; ஆனால் அவர்களிடம் வாக்குரிமை செல்வ சிறப்பிருக்கிறது'

—[o]—

பட்டேலின் பேராசைக்கு காட்கிலின் கண்டனம்

பம்பாய், ஜன. 6—

"பம்பாயைத் தலைநகராகக் கொண்ட ஒரு ஐக்கிய மாராட்டிர மாநிலத்தை நாங்கள் விரும்புகிறோம்,"

என்று பாராளுமன்ற உறுப்பினர் என். வி. காட்கில் கோரியுள்ளார்.

பதாரே சத்திரிய சமாஜத்தின் வைர விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில், மேலும் அவர் கூறியதாவது :—

"இதைப் பற்றி சமாதான முயற்சி செய்யவேண்டியதில்லை. இதைச் சாதிக்க எங்களுக்கு தார்மீக பலமிருக்கிறது. எண்ணிக்கையிலும் நாங்கள் அதிகமாக இருக்கிறோம்.

"பம்பாயைத் தனி மாநிலமாக்குவதை பம்பாய் காங்கிரசுக் குழுத் தலைவர் எஸ். கே. பட்டேல் ஆதரிப்பது சரியல்ல. மாராட்டியத்திலிருந்து பம்பாய் பிரிக்கப்படவேண்டுமென்ற ஆலோசனை மகாராட்டிர மக்களுக்கு ஓர் அறைகூவல் விடுவதாகும். சென்னை. கல்கத்தா முதலிய நகரங்களை விடுத்து, பம்பாயை மட்டும் ஏன் தனிப்பட்ட முறையில் கவனிக்க வேண்டும்?

"பம்பாயிலுள்ள மாராட்டியர்கள் ஏழைகளாக இருக்கலாம்; ஆனால் அவர்களுக்கு நிச்சயம் வாக்களிப்பு பலமிருக்கிறது. ஐக்கிய மராட்டியத்தில் பம்பாய் சேர்க்கப்படுவதினால் இந்நகரிலுள்ள பெரும்பான்மையினரின் நலன்கள் பாதிக்கப்படமாட்டா என்று உறுதியாகக் கூறுகிறேன்."

சென்னையில் தாய்மார்கள் வரவேற்பு

தூத்துக்குடி நிதி விவரம்

20-12-53-ல், தலைவர்களுக்கு தாய்மார்கள் தந்த வரவேற்பு விழாவில், வசூலான தொகையின் வரவு-செலவு கணக்கின் விவரம் :

நேஷனல் பிக்சர்ஸ் ரூ.	100
எஸ். எஸ். பி. லிங்கம்	100
சிவாஜி கணேசன்	50
பி. இராமசாமி	25
பி. வீரராகவன்	25
வி. என். ஜானகி	25
ஏ. சேனுபதி, எம் எல். ஏ.	25
பி இரத்தினசாமி, எம் எல். ஏ.	25
எம். கே. தினதயாளன்	25
டபிள்யூ கே. தேவராஜ்	20
எம் எஸ் தேவசேனு	20
எஸ். மனோரஞ்சிதம்	20
எஸ். பார்வதி அம்மாள்	20
மங்கையர்க்கரசி	20
ஸ்ரீமகள் கம்பெனி	15
டி. ஏ. மதுரம்	15
துரை சிவப்பிரகாசம்	15
தமயான் கோபாலன்	10
டி. எஸ். சரோஜினி	10
எஸ். எஸ். ராசேந்திரன்	10
எஸ். சண்முகம்	10
டி. என். பாப்பம்மாள்	10
டி. வி அமிர்தலட்சுமி	10
கருப்பண்ண முதலியார்	10
பி ஜகஜோதி நாகராசன்	10
ஏ. எஸ். இராமன்	5
கே டி. கே. தங்கமுத்து	5
என். லட்சுமிபதி	5
வெற்றிச்செல்வி அன்பழகன்	5
கன்னியப்பன்	5
மொய்தீன் (ஜூபிடர்)	5
சி. டி. டி. அரசு	5
பி. எஸ் இளங்கோ	5
ஏ ஜி நாராயணசாமி	5
டி என் இராஜப்பா	5
குப்பம்மாள் சுந்தரம்	3
எம். ஆர். பாண்டியன்	3
டி. சண்முகம்	3
ஓ பி எஸ். நடராஜன்	3
அஞ்சுகம்	2
டி. சாந்தா	2
ஏ. என். ராஜன்	2
வி பொன்னுசாமி	2
ஆக ரூ.	695

நன்கொடை மூலம் ரூ.	695-0-0
நுழைவு நன்கொடை	477-0-0
உண்டியல் மூலம்	64-5-4
	1236-5-4
விழாவிற்கான செலவு	334-3-3
மீதி	902-2-1
தூத்துக்குடி வழக்கு நிதி அன்று விடம் நிகழ்ச்சியின்போது கொடுத்தது	901-0-0
அதிகப்படி நிதியில் சேர்ந்தது	1-2-1
மொத்த மீதி ரூ.	902-2-1

மேற்கண்ட தொகை ரூ. 902—2—1-ம் தூத்துக்குடி நிதி பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் அவர்கள் வசம் சேர்ப்பிக்கப்பட்டு, 28—12—53-ந் தேதி 'நம் நாடு' இதழிலும் பிரசுரமாகிவிட்டது என்பதைத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சத்தியவாணிமுத்து,
விழாக் கன்வீனர்.

சிந்தனைப் படிப்பகம்

★

கோவை, ஜன 6—

31—12—53-ல், செயற் குழு கூட்டம் தோழர் தமிழ்மணி தலைமையில் நடைபெறது. தலைச் செயலாளரின் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது புதுக் குழுவில் 9 பேர் அங்கம் வகிக்கின்றனர். வரவு-செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், தைப் பொங்கலை சிறப்பாக நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

மு. கருணாநிதி

ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

★

,, 10 : பொன்மலை, திருச்சி
,, 14 : மன்னார்குடி
,, 15 : நீடாமங்கலம்
,, 16 : கடலூர்-மாலை நிகழ்ச்சி
,, 17 : துறையூர்
,, 24 : உதகமண்டலம்
,, 30 : பழனி
,, 31 : திண்டுக்கல்

தமிழ் வளர்ச்சிக் கழகம்

பரிசுத் திட்டம்

"தமிழ் வளர்ச்சிக் கழகம். ஆண்டுதோறும், சிறந்த நூல்களுக்குப் பரிசும், பரிசுப் பத்திரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கி வருகிறது.

இப்பொழுது 8-வது பரிசுத் திட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதற்கு 1952—53 ஆண்டுகளில் வெளியான எல்லா நூல்களிலும் இரண்டிரண்டு பிரதிகள் கழகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். முன்பே பல வெளியீட்டகங்களும், ஆசிரியர்களும், இவ்வாண்டுகளில் வெளியான சில நூல்களை அனுப்பியிருக்கிறார்கள் அவ்வாறு அனுப்பிய நூல்களை மறுபடியும் அனுப்பவேண்டியதில்லை. இதுவரை அனுப்பாதவர்கள் இம்மாதம் 31-ந் தேதிக்குள், காரியதரிசி, தமிழ் வளர்ச்சிக் கழகம், சர்வகலாசாலைக் கட்டிடம், சேப்பாக்கம், சென்னை—5 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். குறித்த தேதிக்குள் அனுப்பப்பட்ட நூல்களைத்தான் பரிசீலனையில் சேர்த்துக்கொள்ள இயலும். புத்தகங்கள் வெளியானவுடனே அவற்றில் இரண்டு பிரதிகள் அனுப்பி வைத்துவிட்டால் அவற்றை எந்தெந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமோ அவ்வாறு சேர்த்துக் கொள்ள வசதியாக இருக்கும். அவ்வாறே அனுப்பக் கோருகிறோம்.

மொழி பெயர்ப்பு நூல்கள் சாதாரணமாகப் பரிசுத் திட்டத்தில் இடம் பெறா. ஒரு தடவை பரிசுத் திட்டத்தில் சேர்ந்த நூல்கள் மறுபடியும் அதில் சேரா. ஆனால், அவற்றை மாற்றியோ, அபிவிருத்தி செய்தோ, மறுபதிப்பாக வெளியிட்டால் அவற்றை அனுப்பலாம். இதுவரை பரிசுக்கு அனுப்பப் பெறாத நூல்களின் புதிய மதிப்பு இப்பொழுது வெளியாகியிருந்தால் அவைகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தமிழ்நாடு அல்லாத வேறு மாகாணங்களிலும், இலங்கை முதலிய இடங்களிலும் வெளியான தமிழ் நூல்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்" என்று செயலாளர்களான ரா. தெய்வசிகாமணி... மூர்த்தி, ம. ப பெரியசாமித் தூரன் அறிவிக்கின்றனர்.

கலப்பு மணம்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிடிக்குப்பதன் மூலம், நானும் என் இயக்கமும் செய்துவரும் தொண்டுக்கு, வாழ்த்து அரை வழங்கியிருக்கிறார்கள். இது, எனக்குப் புதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது.

"நான், சிறைச்சாலைக்குள் ஒரு காலையும், வீட்டுக்குள் மற்றோர் காலையும் வைத்துக் கொண்டிருப்பவன். எனக்கு என் கொள்கைகள் பாராட்டப் பெறும் காட்சியைக் காணும்போது, 'நாம் செய்வது, சரி. நமது கொள்கைகள், நிச்சயம் வெற்றி பெறும்,' என்ற ஊக்கத்தை, இந்த வாழ்த்துரை; அளிக்கிறது.

இந்த வரவேற்பு, தனிப்பட்ட முறையில், எனக்குத் தரப்பட்ட தொன்றாக, நான் கருத மாட்டேன்—நான் சேர்ந்திருக்கும் இயக்கத்திற்கு, தரப்பட்டதாகும்—அது கொண்டிருக்கும் கொள்கைகளுக்குத் தரப்பட்டதாகும்."

★

"நகரசபையாளருக்கு, நாட்டின் நல்வாழ்வில், பெரும் பங்கு இருக்கிறது. நகரசபை அனுபவம் பெற்றோரே, நாட்டை ஆளவேண்டும் என்ற கொள்கையை, நான் ஏற்கிறேன். கப்படி, ஒரு உயர்நிலைப்பள்ளியில் படித்து விட்ட பிறகுதான், கல்லூரிக்குச் செல்ல முடிகிறதோ, அதுபோல இதுபோன்ற நகர மன்றங்களில் பணியாற்றிய பின்னர், நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்திடும் நிர்வாகம் சிறப்பாக இருக்கும். ... அமைச்சர்களாக விளங்குகிறவர்கள். பலர், நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்தும் போது ... இந்த நகர ஆட்சி மன்ற உறுப்பினர்கள். தமது நிர்வாகத்தை, நல்ல முறையில், செவ்வனே நடத்திவரும் செய்தி கேட்டு மகிழ்கிறேன். இந்தத் திறமை, வளரவேண்டுமென, விரும்புகிறேன்."

★

"மக்களின் வாழ்க்கைச் செப்பனிட்டு அமைப்பதில், நாடாளும் மந்திரிகளைவிட, நகர மன்றத்தினர்களால் பல காரியங்களைச் செய்யமுடியும். மந்திரிகள், ஒரு மகாண முழுமையையும், கண்காணிக்க வேண்டியவர்கள்; ஆனால், நகர மன்ற உறுப்பினர்கள், ஒரு குறிப்பிட்ட சில ஆயிரம் மக்களோடு, நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள். இவர்கள், அடிக்கடி, மக்கள் மன்றத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடியும் அவ்விதம், தொடர்பு கொண்டு, அடிக்கடி பழகவும் வேண்டும் அங்ஙனம் பழகினால், ஆட்சியாளரால் சாதிக்கமுடியாத பல காரியங்களை, நீங்கள் சாதிக்கலாம்.

"உதாரணத்துக் கொன்று சொல்வேன்—நமது சமுதாயத்தில் தாண்டவமாடும் ஜாதிக் கொடுமையை, ஒழிக்க நீங்கள் முயற்சிக்கலாம். அதற்கு முதல் நடவடிக்கையாக, ஆங்காங்கும் கலப்பு மணங்கள் பெருக, உதவி செய்யலாம். கலப்பு மணம் பெருகினால், ஜாதிகள் ஒழிய, வழி ஏற்படும். இவ்விதம் கலப்பு மணம் செய்வதில், பார்ப்பன மக்கள் வழிகாட்டியாக இருக்கிறார்கள்."

"அன்பர் ஆச்சாரியார் அந்தணர் குலத்துதித்தவர்; வேத கர்மானுஷ்டானங்களை அனுசரிப்பவர்; ஆனால் அவருடைய திருக்குமாரியை காந்தியாரின் புதல்வருக்கு, கலியாணம் செய்து கொடுத்திருக்கிறார்! திருமண ஏற்பாடு செய்யும் போது, 'அம்மா! லட்சுமி, உன் ஆசைப்படி செய்து கொள்,' என்றாரே யொழிய, வேதம் தடுக்குமா—உபநிஷத் கண்டிக்குமா—என்றெல்லாம் அவர் பார்க்கவில்லை.

"அதே போல, குடந்தைக்கும் பக்கத்திலுள்ள ஊரில் வாழ்ந்த விதவைப் பெண் ருக்மிணி, இன்று அருண்டேல் ருக்மிணியாகி, அகில உலக அரங்கில், மிளிர்கிறார்—பாரிஸ் நகரில் அவர் நடனம் ஆட, அதற்கு சச்சிவோத்தம சர். சி. பி. ராமசாமி அய்யர் தலைமை வகிக்க—அதைக் கண்ட சர் எஸ். ராதாகிருஷ்ணன் பாராட்ட—'இதோ, படம், காணீர்!' என்று பத்திரிகைகளில் வருகிறது.

"இது, எந்த வேதத்துக்கு, உடன்பாடு? சாஸ்திரம் ஒத்துக்கொள்ளக்கூடிய காரியமா? எந்த உபநிஷத்தில், ஆதாரம் காட்டமுடியும்? எனினும், அவர்கள், செய்கிறார்கள்! ஆனால் நம்மில்தான், கலப்பு மணம் என்றால், அரிவாளைத் தீட்டிக்கொண்டும், 'ஆகா! விடமாட்டேன்!' என்று கூவிக்கொண்டும், கிடக்கிறோம். இதனால், நாட்டில், கலப்பு மணங்கள், செய்து கொள்ளப் பலர் பயப்படுகிறார்கள்! இந்தப் பயத்தை, மக்கள் மத்தியில் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்ற, நகரசபைகள், போக்கவேண்டும்.

"யாராவது இரு தம்பதிகள்-உங்களூருக்குப் பக்கத்திலிருந்தாலும் சரி—ஒரு உறுப்பினரின் தொகுதியிலிருந்தாலும் சரி—உங்கள் நகரின் எந்தப் பாகத்திலிருந்தாலும் சரி—கலப்பு மணம் செய்து கொள்ள விரும்பினால், அவர்கள் அங்ஙனம் செய்துகொள்வதற்கு வேண்டிய வசதிகளை நீங்கள் செய்து தரவேண்டும். அவர்கள், அங்ஙனம் செய்து கொண்டால், நகர மன்றத்தின் சார்பில் அவர்களுக்கு வரவேற்பளித்து, நீங்கள், கௌரவிக்க வேண்டும்."

★

"அரசியலில் ஆளும் கட்சிக்கு மாற்றுக் கட்சிக்காரனாகிய, எனக்கு, இந்த வரவேற்பை அளிக்கும் பண்பை, நான் வரவேற்கிறேன். இந்தப் பண்பு, சாதாரணமாக, நம் நாட்டில் காண்பதற்கரிதொன்று. எதிர்க் கட்சிகளை, மாற்றுக் கட்சிக்காரர்கள் உபசரிக்கும் அரசியல் நாகரிகம், நமக்கு மிக மிகத் தேவை. எதிர்க் கட்சிகள், என்ன கூறுகிறது?; என்பதை அறியும் ஆசை, ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அவைகள் கூறும் கருத்துக்களைக் கேட்காமல், எதிர்க் கட்சிகள் என்றாலே, எரிச்சல் கொள்வது—வளரும். ஜனநாயகத்துக்கு, நல்லதல்ல

"அண்மையில், ஒரு செய்தி பார்த்தேன். அது ஜுக்கு ஸ்லேவியாவில் பரீட்சை செய்து பார்த்தது சம்பந்தமாக, பிரிட்டனை ஆளும் கன்சர்வேடிவ் கட்சி ஒரு அறிக்கையொன்றைத் தயாரித்தது அந்த அறிக்கை இரகசியம் நிரம்பியதென்றாலும், அதில் மூன்று 'காபிகள்' எடுத்து, ஒன்றை தன் கட்சிக்கு வைத்துக் கொண்டது—இன்னொன்றை ராணியாருக்கு அனுப்பிற்று—மற்றொன்றை, எதிர்க் கட்சியான லேபர் கட்சிக்கு அனுப்பிற்று. இவ்விதம் நாட்டின் நன்மை தீமைகளைப் பாதிக்கும் பிரச்னைகளில், எல்லாக் கட்சிகளும் ஒத்துப் போகவேண்டும். கட்சிகள் யாவும், மக்கள் நன்மைக்காகவே ஒழிய, மாச்சரியத்தை வளர்த்துக் கொண்டு, தமக்குள் சண்டையிட்டுக் கொள்வதற்காக, அல்ல!"

இந்த அரசியல் பண்பை வளர்க்கும் அறிகுறியாக, எனக்கு அளித்த வரவேற்புக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

திருக்குறள் சிறப்புக் கூட்டம்

பொன்மலை கலைக் கழகத்தின் ஆதரவில், 9—1—54 சனிக்கிழமை மாலை 5 மணியளவில், பொன்மலை இரயில்வே படிப்பக மன்றத்தில், திரு. நம் ... லா மாஸ்கரனல் தலைமையில், திருக்குறள் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம், தோழர்கள் வி. இளங்கண்ணனார் "தமிழர் செல்வம்" என்னும் பொருள் பற்றியும் தோழர் மு. கருணாநிதி "தமிழ்க் கலை" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றுவர்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக

எழும்பூர் 32-வது வட்ட தி. மு. கழக சார்பில், 'காதல் கல்யாணம்' என்ற நாடகம், சென்னை, எழும்பூர் மியூசியம் தியேட்டரிலும், வண்ணை தியாகராயர் கல்லூரியிலும் நடைபெற இருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

சூலூர்

பாராட்டுக் கூட்டம்

9—1—54 சனி மாலை

இடம்: பெரியார் மைதானம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

★

திருச்சி

ஆண்டு விழா

10—1—54 ஞாயிறு காலை 9 மணிக்கு

இடம்: திருச்சி தேவர் மன்றம்

தலைவர்: எம். எஸ். மணி

பேசுவோர்:

ஏ. பி. பி. ஆசைத்தம்பி

எஸ். நெடுமாறன்

கலா நிகழ்ச்சி

சிற்பி ஏ சுப்ரமணியம் குழுவினர்

★

பெ... லூர்

10—1—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: திருஞான சம்பந்தர் மடத்தின் பக்கம்

தலைவர்: எஸ் வி. பாண்டியன்

பேசுவோர்:

நெல்லை அலிஷேக் மன்சூர்

தூத்துக்குடி. எம். ரத்தினம்

★

கடலூர்

திராவிடர் திருநாள்

இடம்: நியூ சினிமா

13—1—54 புதன் காலை 9 மணிக்கு

தலைவர்: ஆர் பாலகுருசாமி

பேசுவோர்:

எம். ஜி இராமச்சந்திரன்

க. அன்பழகன்

இரே. இளம்வழுதி

கட்டணம்: அணா 8, 4.

பர்மியப் பிரதமருக்கு இலங்கையின் அழைப்பு

★

ரங்கூன், ஜன. 6—பர்மியப் பிரதமரை இலங்கைக்கு வரும்படி இலங்கை சர்க்காரிடமிருந்து உத்தியோகப் பூர்வமான அழைப்பு வந்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பொது விஷயங்களைப் பற்றிப் பேச அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பர்மிய மந்திரி சபை இந்த அழைப்பு விஷயமாக முடிவு செய்யும்.

"பகுத்தறிவு"

ஆசிரியர்: ப. கண்ணன்

மார்கழி இதழ் எங்கும் விற்பனையாகிறது. பொங்கல் மலர் தயாராகிறது அறிவுப் பொக்கிஷமாக. உங்கள் மலருக்குச் சொல்லி வைத்து விட்டீர்களா?

தனிப்படி 0—8—0

வேண்டுவோர் 0—14—0 அனுப்பினால் பதிவுத்தபாலில் அனுப்பப்படும். ஆண்டுக் கையொப்பம் ரூ 3 அனுப்புவோர்க்கு மலர் இலவசம்

"பகுத்தறிவு" அலுவலகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம்

கிளைக் கழகத் தோழர்கட்கு "16—1—54 சனிக்கிழமை 12 மணி முதல் மாலை 3 மணி வரை மாவட்டச் செயற்குழுக் கூட்டம், திருப்பாதிரிப்புலியூர் தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

பொருள்: மாநாடு வரவு-செலவு கணக்கு முடித்தல்; நமது மாவட்டச் சார்பில், தூத்துக்குடி நிதி தர வேண்டியது பற்றி முடிவு செய்தல்.

அன்று கடலூரில் நடைபெறும் திராவிடர் திருநாளில், தோழர்கள் அண்ணாதுரை, கருணாநிதி ஆகியவர்கட்கு வரவேற்பு தரவும், தூத்துக்குடி நிதிக்காகவும், முதலில் கிளைக் கழகங்கள் 10 ரூபாய் உடன் அனுப்ப வேண்டுகிறேன்.

முகவரி:—இரே. பாலகுருசாமி, மழைய கல்லூர், சிதம்பரம்.

மாவட்ட உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டப்படுகிறார்கள்," என்று மாவட்டச்செயலாளர் தோழர் இரே. பாலகுருசாமி அறிவிக்கிறார்.

தபால் கட்டணங்கள் உயராது

முன் செய்திக்கு மறுப்பு

புதுடில்லி, ஜன. 7—ஏப்ரலிலிருந்து தபால் கட்டணம் உயராலாமென ஜ: ஜீ... ராம் அவ்ஸாமில் வெளியிட்டதாக வந்த செய்தி, தவறென்று இப்போது மறுக்கப்படுகிறது.

தபால் கட்டணங்களைக் குறைக்கக் கோரியதற்கு, அவர் கூறியதாவது:

"இப்போது அவ்வாறு செய்வதற்கில்லை; சர்க்கார் பெருத்த நட்டமடைந்துள்ளது; அதற்குப் பதிலாகச் சில தபால் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறது; ஆனால், இப்போது உயர்த்துவதாகவும் நோக்கமில்லை" என்றார்.

பூகம்ப அதிர்ச்சி

பத்ராசலத்தில் நிகழ்ச்சி

பத்ராசலம், ஜன. 5—நேற்று மாலை சுமார் 5 மணிக்கு பெரிய சத்தத்துடன் இங்கு ஒரு பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. சுமார் 3 விநாடிகள் அதிர்ச்சி நீடித்திருந்தது. முசாபரி பங்களாவில் பேசிக் கொண்டிருந்த மத்திய உள்நாட்டு மந்திரி டி. எம். தத்தர் தமது நாற்காலியிலிருந்து குதித்தார்.

ஓட்டு வீடுகளின் ஓடுகள் பறந்தன. ஆனால் உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கைத்தறித் துணி விற்பனை

—(:)—

ஜன. 10 முதல் 13-ம் நாள் வரை

—(:)—

நான்கு நாட்கள் நாடெங்கும் கழகத் தோழர்கள் நடத்துவர்

கதியற்று நிற்கும் ஏழைக் கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களைக் கைதூக்கி விடவும், பொங்கற் புது நாளைப் பொலிவோடும், பூரிப்போடும், பெருமையோடும் நாடெங்கும் கொண்டாடும்படி செய்யவும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஜனவரித் திங்கள் 10-ம் நாளிலிருந்து, 13-ம் நாள் வரை ஊர்தோறும் கைத்தறித் துணி விற்பனை செய்ய வேண்டுகிறேன்.

—அண்ணாதுரை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★